| MSSRF Science for Sustainable Development | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் : | **தேனி** | காலம் : | **22/06/2024** | முதல் | **26/06/2024** |
| | அறிக்கை எண் : | **050/ 2024** | வெளியீட்டு நாள் : | **21/06/2024** | | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 37°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-26° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (16.06.2024 முதல் 20.06.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 26-06-22024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16/06 | 17/06 | 18/06 | 19/06 | 20/06 | தேதி | நாள்-1 22/06 | நாள்-2 23/06 | நாள்-3 24/06 | நாள்-4 25/06 | நாள்-5 26/06 |
| 0.0 | 0.0 | 0.6 | 5.5 | 0.8 | மழை (மி.மீ) | 2 | 26 | 25 | 27 | 10 |
| 40 | 39 | 39 | 38 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 33 | 32 | 30 | 29 | 28 |
| 27 | 27 | 25 | 26 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 22 | 21 | 20 | 19 | 18 |
| 5 | 4 | 6 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 58 | 65 | 86 | 72 | 70 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 90 | 90 | 80 | 80 |
| 58 | 51 | 80 | 72 | 52 | | 60 | 60 | 60 | 60 | 70 |
| 18 | 9 | 4 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 10 | 12 | 12 | 14 |
| வட கிழக்கு | தெற்கு | வட மேற்கு | தெற்கு | மேற்கு | காற்றின் திசை | மேற்கு | தென் மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூன் 23, 24, 25 மற்றும் 26 தேதி மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 28°-33° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 18°-22° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 10 முதல் 14 கி.மீ வேகத்தில், மேற்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (21 ஜூன் - 04 ஜூலை 2024):**

### மழைப்பொழிவு :

21-06-2024 - 27-06-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

28-06-2024 - 04-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் பொதுவாக இயல்பானது முதல் முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

21-06-2024 - 27-6-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 26° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

28-06-2024 - 04-7-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 26° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

21-06-2024 - 04-7-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூன் 23, 24, 25 தேதி கன மழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக்குட்டைகள் மற்றும் நீர்நிலைகளை சரி செய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும். இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சிமருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்தி வைக்கும்படியும், விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும், கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமலும், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

**விவசாயம் :**

கடந்த சில நாட்களாக ஓரளவு மழைப் பொழிவு பெறப்பட்டுள்ளதாலும், அடுத்த சில நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுவதாலும் விவசாயிகள் உழவு செய்தல் மற்றும் நிலம் தயாரித்தல் வேலைகளுக்கு திட்டமிடலாம்.

மேலும் விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக் குட்டைகள் மற்றும் நீர் நிலைகளை சரி செய்து மழை நீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மருந்து தெளிக்கும் வேலைகளை சிறிது காலத்திற்கு ஒத்தி வைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் :** கொத்தவரை, **எலுமிச்சை, கால்நடை.**

கொத்தவரை:

கொத்தவரைப் பயிரில் அசுவினி தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இவ்வகை இளம் பூச்சிகள் மற்றும் முதிர் பூச்சிகள் இலைகளின் சாற்றை உறிஞ்சும்.

இதன் காரணமாக செடிகள் வாடும், பூக்கள் வாடி தொங்கும், செடிகளின் வளர்ச்சியும் தடைப்படும்.

இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 40 கிராம் என்ற அளவில் அசிபேட் உடன் 10 மில்லி ஒட்டுப்பசை கலந்து தெளிக்க வேண்டும்.

**எலுமிச்சை:**

கட்டுப்படுத்த நான்கு மாதத்திற்கு ஒரு முறை மரம் ஒன்றுக்கு 50 கிராம் சூடோமோனஸ் புளூரசன்ஸ் உயிரி இடுபொருளை செடியின் தூர் பகுதியிலிருந்து 50 செ.மீ தூரத்திலும் 15செ.மீ ஆழத்திலும் இடவேண்டும். தீவிர தாக்குதல் காணப்பட்டால் மரம் ஒன்றுக்கு 35 கிராம் என்ற அளவில் கார்டாப் ஹைட்ரோகுளோரைடு ரசாயண மருந்தினை வைத்து நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.

**கால்நடை:**

கால்நடை வளர்ப்பில் விவசாயிகள் மாடுகளுக்கு தினமும்; 2 முதல் 3 கிராம் வரை இட்லிக்குப் போடப்படும் சோடா உப்பும், 15 முதல் 20 கிராம் வரை சமையலுக்கு உபயோகிக்கும் உப்பும் தீவனத்துடன் சேர்த்து அளித்து வந்தால், பாலில் எஸ்.என்.எப். என்ற கொழுப்பற்ற திடப்பொருட்களின் அளவு அதிகரிக்கும்.